# EASTERN UNIVERSITY, SRI LANKA

## First Examination in Business Administration / Commerce

## 1996/ 1997. (July/ August 2002). (External)

## BBA/COM 102 Financial Accounting

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக — நேரம்: மூன்று மணித்தியாலங்கள்

---

1. நிசான் கம்பனியானது ஒவ்வொன்றும் ரூ.10 வான 70000 சாதாரண பங்குகளையும் ஒவ்வொன்றும் ரூ.10 வான 10% 30000 மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்குகளையும் கொண்ட ரூ.1000000 அனுமதித்த மூலதனத்தைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. 30.06.2002 இல் உள்ளவாறு அதன் கணக்கேடுகளிலிருந்து தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி பின்வருமாறு.

| விடயங்கள் | வரவு | செலவு |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| காணி கட்டடம் (காணி கிரயத்தில் ரூ.300000) | 700000 | |
| தளபாடமும் பொருத்திகளும் | 200000 | |
| மோட்டார் வாகனங்கள் | 290000 | |
| முதலீடுகள் | 200000 | |
| கடன்பட்டோர் / கடன்கொடுத்தோர் | 105000 | 120000 |
| ஐயக் கடனுக்கான ஏற்பாடு 1.7.2001 இல் | | 8000 |
| வழங்கி இறுத்த சாதாரண பங்கு மூலதனம் | | 500000 |
| வழங்கி இறுத்த 10% முன்னுரிமைப் பங்கு மூலதனம் | | 200000 |
| பங்கு வட்டம் | | 260000 |
| பொது ஒதுக்கம் | | 100000 |
| இலாப நட்டக் கணக்கு மீதி 1.7.2001இல் | | 45000 |
| 16% தொகுதிக்கடன்கள் | | 200000 |
| செலுத்திய வருமான வரி | 120000 | |
| 2000/2001இறுதிக் காலாண்டுக்கான வருமான வரி ஏற்பாடு | | 30000 |
| செலுத்திய தொகுதிக்கடன் வட்டி | 16000 | |
| செலுத்திய இடைக்காலப் பங்கிலாபம் - சாதாரண பங்கு | 25000 | |
| - முன்னுரிமைப் பங்கு | 15000 | |
| தொடக்கச் செலவுகள் | 30000 | |
| முதலீட்டு வருமானம் | | 40000 |
| தீயழிவு நட்டம் | 21000 | |
| காசும் வங்கியும் | 65000 | |
| இருப்புக்கள் 1.7.2001இல் | 142000 | |
| கொள்வனவுகள் | 850000 | |
| விற்பனைகள் | | 1487000 |
| திரும்பல்கள் | 17000 | 10000 |
| நிர்வாகச் செலவுகள் | 48500 | |
| விற்பனை விநியோகச் செலவுகள் | 65500 | |
| இயக்குனர் வேதனங்கள் | 75000 | |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | 15000 | |
| | **3000000** | **3000000** |

மேலதிகத் தகவல்கள்:

I. 30.06.2002 இல் இருப்புக்கள்- ரூ.145000.

II. நடைமுறையல்லாச் சொத்துக்களின் அசைவு பின்வருமாறு:

| | கட்டடம் | தளபாடம் பொருத்திகள் | மோட்டார் வாகனம் |
|---|---|---|---|
| கிரயம் | 500000 | 200000 | 500000 |
| திரண்டபெறுமானத்தேய்வு | 100000 | 40000 | 150000 |
| மீதி 1.7.2001இல் | 400000 | 160000 | 350000 |
| சேர்ப்பனவு | - | 40000 | - |
| விற்பனை | - | - | 60000 |
| மீதி 30.06.2002 இல் | **400000** | **200000** | **290000** |

நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கு பின்வருமாறு பெறுமானத்தேய்வுக்கு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்:

கட்டடம் - 2.5% கிரயத்தில்

தளபாடம் பொருத்திகள் - 10% குறைந்துசெல் மீதியில் (புதியது உட்பட)

மோட்டார் வாகனம் - 10% கிரயத்தில்.

நடப்பாண்டில் ரூ.100000 கொள்விலையுடைதும் விற்பனைத் திகதியில் ரூ.50000 பெறுமதியிடப்பட்டதுமான மோட்டார் வாகனமொன்று ரூ.60000 விற்கு விற்கப்பட்டது. விற்பனையால் பெற்ற தொகையை காசுக் கணக்கில் வரவு வைத்து மோட்டார் வாகனக்கணக்கில் செலவு வைத்ததைத் தவிர வேறு எப் பதிவுகளும் செய்யப்படவில்லை.

III. கடன்பட்டோரிலிருந்து ரூ.5000 அறவிடமுடியாக்கடனாகப் பதிவழிப்புச் செய்யப்படல் வேண்டும். அத்துடன் மிகுதிக்கடன்பட்டோரில் 5% ஐயக்கடனுக்கு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

IV. 2000/2001 இன் இறுதிக் காலாண்டின் வருமான வரி ரூ.35000 என ஏற்றுக்கொள்ளப்பட்டு இவ்வாண்டில் செலுத்தப்பட்டது. நடப்பாண்டின் (2001/2002) இறுதிக் காலாண்டுக்கான வருமான வரியேற்பாடு ரூ.25000 என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது..

V. முதலீட்டின் சந்தைப் பெறுமதி நிதியாண்டின் இறுதியில் ரூ.190000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இப் பெறுமதியை கணக்கில் காட்டுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

VI. காணி ரூ.350000 ஆக மீள்மதிப்பீடு செய்யப்பட்டது. இப் பெறுமதியையும் கணக்கில் காட்டுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

VII. இயக்குனர்கள் பின்வருமாறு தீர்மானித்துள்ளனர்.

i. ரூ.10000 ஐ பொதுஒதுக்கத்திற்கு மாற்றுதல்

ii. தொடக்கச்செலவில் அரைவாசியைப் பதிவழித்தல்

iii. சாதாரண பங்குதாரர்களுக்கு ரூ.25000 இறுதிப் பங்கிலாபத்தினையும் முன்னுரிமைப்பங்கு தாரர்களுக்குரிய இறுதிப்பங்கிலாபத்தினையும் வழங்கல்.

**வேண்டப்படுவது :**

சாதாரண பங்குதாரருக்கு பிரசுரிக்கத்தக்க வகையில் கம்பனியின் 30.06.2002 இல் முடிவுற்ற ஆண்டுக்கான இலாப நட்ட கணக்கு, உரிமையில் ஏற்பட்ட மாற்றங்களின் கூற்று, மற்றும் 30.06.2002 இல் உள்ளவாறான ஐந்தொகை என்பவற்றைத் தயாரிக்குக.(செய்கைகளைத் தெளிவாகக் காட்டுக.)

**20** புள்ளிகள்

2. றீகல் கம்பனியானது கொழும்பிலுள்ள தலைமை அலுவலகத்தினையும், மட்டக்களப்பிலுள்ள தன்னிச்சையான கிளையொன்றினையும் கொண்டு இயங்குகின்றது. பொருட்கள் கிரயத்துடன் 25% கூட்டி தலைமை அலுவலகத்தினால் கிளைக்கு அனுப்பப்படுகின்றன. கிளையும் தனது கொள்வனவை உள்ளூர் சந்தையில் மேற்கொள்கின்றது. 30.06.2002 இல் உள்ளவாறான தலைமை அலுவலகத்தினதும் கிளையினதும் பரீட்சை மீதிகள் பின்வருமாறு

| | தலைமையலுவலகம் | | கிளை | |
|---|---|---|---|---|
| | வரவு (ரூ.) | செலவு (ரூ.) | வரவு (ரூ.) | செலவு (ரூ.) |
| கொள்வனவுகள் / விற்பனைகள் | 792000 | 750000 | 90000 | 450000 |
| கிளைக்கு அனுப்பிய பொருட்கள் | | 210000 | | |
| த.அ.லிருந்து பெறப்பட்ட பொருட்கள் | | | 198000 | |
| ஆரம்ப இருப்பு - கிரயத்தில் | 54000 | | | |
| ஆரம்ப இருப்பு - பட்டியல் விலையில் | | | 24000 | |
| தேறாத இலாப ஏற்பாடு 1.7.2001இல் | | 4800 | | |
| கூலியும் சம்பளமும் | 72000 | | 54000 | |
| வரியும் காப்புறுதியும் | 24000 | | | |
| பொதுச் செலவுகள் | 3900 | | 2700 | |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் கிரயத்தில்/ பெறுமானத்தேய்வு ஏற்பாடு 1.7.2001 இல் | 240000 | 105000 | 150000 | 66000 |
| கடன்பட்டோர்/கடன்கொடுத்தோர் | 54000 | 82200 | 19500 | |
| வங்கி மீதி | 16500 | | 7620 | |
| பங்கு மூலதனம் | | 120000 | | |
| இலாப நட்ட கணக்கு 1.7.2001இல் | | 28470 | | |
| த.அ. நடைமுறைக் கணக்கு | | | | 29820 |
| கிளை நடைமுறைக் கணக்கு | 44070 | | | |
| | 1300470 | 1300470 | 545820 | 545820 |

மேலதிகத் தகவல்கள்:

1. 30.06.2002 இல் இருப்புக்கள்: தலைமையலுவலகம் ( கிரயத்தில்) – ரூ. 66000.
   கிளை – ரூ. 48000.

   கிளையால் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களில் 1/5 பங்கு கிளையின் இருப்பினுள் உள்ளடங்கியுள்ளது.

2. வழியிற் சரக்கு (பட்டடியல் விலையில்) - ரூ. 12000.
   வழியிற் காசு - ரூ. 2250.

3. ஆண்டின் இறுதியில் தலைமையலுவலகத்தின் வரி மற்றும் காப்புறுதிச் செலவுகளில் 25% ஐ கிளைக்கு சாட்டுதல் செய்ய தீர்மானிக்கப்பட்டடது.

4. நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கு புத்தகப் பெறுமதியில் ஆண்டுக்கு 20% பெறுமானத்தேய்வுக்கு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

வேண்டப்படுவது:

I. பின்வருவனவற்றை தலைமை அலுவலகம், கிளை, மற்றும் முழு வியாபாரம் ஆகியவற்றிற்கு நிரல் முறையில் தயாரிக்குக.

   1. 30. 06.2002 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வியாபார இலாபநட்டக்கணக்கு
   2. 30. 06.2002 இல் உள்ளவாறான ஐந்தொகை.

II. தலைமையலுவலக நடைமுறைக்கணக்கு மற்றும் கிளை நடைமுறைக்கணக்கு ஆகியவற்றைத் தயாரிக்குக.

**20 புள்ளிகள்**

**3.** இலாப நட்டங்களை முறையே 3:2:1 எனும் விகிதத்தில் பகிர்ந்து கொள்ளும் ரவி, குணா, அருள் என்னும் பங்காளர்கள் 30.06.2002 இல் தமது பங்குடமையை கலைக்கத் தீர்மானித்தனர். அத்திகதியில் அவர்களது ஐந்தொகை பின்வருமாறு :

| பொறுப்புக்கள் | ரூபா. | சொத்துக்கள் | ரூபா. |
|---|---|---|---|
| மூலதனம் : ரவி | 100000 | காணி, கட்டடம் | 100000 |
| குணா | 50000 | உபகரணம் | 48000 |
| அருள் | 20000 | இருப்புக்கள் | 32000 |
| நடைமுறைக் கணக்கு : ரவி | 20000 | கடன்பட்டோர் | 28000 |
| குணா | 10000 | காசு மீதி | 22000 |
| கடன்கொடுத்தோர் | 30000 | | |
| | **230000** | | **230000** |

சொத்துக்கள் பின்வருமாறு பகுதி பகுதியாக தேறின.

| காலம் | சொத்துக்கள் | ரூபா. |
|---|---|---|
| ஜனவரி | இருப்புக்கள் (பகுதி) | 20000 |
| | கடன்பட்டோர் (பகுதி) | 15000 |
| பெப்ரவரி | இருப்புக்கள் (பகுதி) | 12000 |
| | கடன்பட்டோர் (மிகுதி) | 8000 |
| | உபகரணம் (பகுதி) | 23000 |
| மார்ச் | காணி கட்டடம் | 110000 |
| | உபகரணம் (மிகுதி) | 20000 |
| | இருப்புக்கள் (மிகுதி) | 5000 |

கலைப்புச் செலவு ரூபா. 5000 மார்ச்சில் செலுத்தப்பட்டது. கடன்கொடுத்தோர் முற்றாக செலுத்தப்பட்டனர்.

**வேண்டப்படுவது :**

பின்வருவனவற்றைத் தயாரிக்குக.

i. சொத்துக்களில் இருந்து தேறிய தொகையை பங்காளரிடையே பகிரும் முறையை காட்டும் கூற்று (விகிதாசார மூலதன முறையில்)

ii. தேறிய பணக்கணக்கு

iii. பங்காளர் மூலதனக்கணக்கு

iv. காசுக்கணக்கு

**20** புள்ளிகள்

4. ஒரு தனிவியாபாரியாகிய திரு. வேலாயுதம் அவரது கணக்கேடுகளை முறையாகப் பேணவில்லை. ஆயினும் 30.06.2002 இல் முடிவுற்ற அவரது நிதியாண்டிற்கான பின்வரும் நிதித் தகவல்களை வழங்கக் கூடியவராகவுள்ளார்.

i. ஆண்டிற்கான கொடுக்கல் வாங்கல்களின் சுருக்கம்

| கொடுக்கல் வாங்கல் | ரூபா. |
|---|---|
| காசு விற்பனைகள் | 140000 |
| காசுக் கொள்வனவுகள் | 70000 |
| கடன்பட்டோரிடமிருந்து பெற்ற காசு வங்கியில் இடப்பட்டது | 500000 |
| காசோலை மூலம் கடன்கொடுத்தோருக்கு செலுத்தியது | 420000 |
| வாடகை செலுத்தியது | 20000 |
| காசோலை மூலம் விற்பனையாளர் சம்பளம் செலுத்தியது | 28000 |
| விற்பனைச் செலவுகள் செலுத்தியது | 15000 |
| சில்லறைச் செலவுகள் செலுத்தியது | 5000 |
| காசோலை மூலம் உபகரணம் கொள்வனவு செய்தது. | 60000 |

ii.

| மீதிகள் | 1.7.2001 | 30.06.2002 |
|---|---|---|
| | ரூபா. | ரூபா. |
| காசு மீதி | 15000 | 10000 |
| வங்கி மீதி | 5000 | 7000 |
| இருப்புக்கள் | 60000 | 10000 |
| கடன்பட்டோர் | 37000 | 47000 |
| கடன்கொடுத்தோர் | 30400 | 25400 |
| வாடகை சென்மதி | 3000 | 9000 |
| தளபாடம் | 100000 | 90000 |
| உபகரணம் | 40000 | 90000 |

iii. அவர் பொருட்களை காசுக்கும் கடனுக்கும் கொள்விலையுடன் 25% கூட்டிய விலையில் விற்பனை செய்தார்.

iv. 25.06.2002 இல் அவரது களஞ்சியத்திலிருந்து சிலபொருட்கள் களவாடப்பட்டிருந்தன.

v. ஆண்டுகாலத்தில் வேலாயுதம் வியாபாரத்தில் இருந்து அவரது தனிப்பட்ட பயன்பாட்டிற்காக காசினை பற்றியிருந்தார். அப்பற்றுக்கள் பற்றி எதுவித பதிவுகளையும் அவர் பேணவில்லை.

**வேண்டப்படுவது:**

திரு. வேலாயுதத்திற்காக பின்வருவனவற்றைத் தயாரிக்குக.

i. 01.07.2001 இல் உள்ளவாறான ஐந்தொகை

ii. 30.06.2002 இல் முடிவுற்ற ஆண்டிற்கான காசேடு (இரட்டை நிரல்)

iii. 30.06.2002 இல் முடிவுற்ற ஆண்டிற்கான வியாபார இலாப நட்டக்கணக்கு

iv. 30.06.2002 இல் உள்ளவாறான ஐந்தொகை

**20** புள்ளிகள்

LIBRARY 04 OCT 2002

5. I. உபகரணமொன்றின் நான்கு வகைகளை வெவ்வேறாக விற்பனை செய்யும் A, B, C, D என்னும் நான்கு திணைக்களங்களைக் கொண்ட வியாபார நிறுவனமொன்று 31.12.2001 இல் முடிவுற்ற நிதியாண்டிற்கான பின்வரும் தகவல்களை உங்களுக்கு வழங்குகின்றது.

| திணைக்களம் | இருப்புக்கள் (அலகுகள்) 01.01.2001 இல் | கொள்வனவுகள் (அலகுகள்) | இருப்புக்கள் (அலகுகள்) 31.12.2001 இல் | அலகு ஒன்றுக்கான விற்பனை விலை ரூபா. |
|---|---|---|---|---|
| A | 400 | 3000 | 200 | 200 |
| B | 600 | 2000 | 320 | 250 |
| C | 300 | 4000 | 400 | 300 |
| D | 200 | 2000 | 300 | 250 |

மொத்த கொள்வனவு கிரயம் ரூபா. 2240000

ஒவ்வொரு திணைக்களத்திலும் மொத்த இலாப வீதம் சமமானதாகும்.

**வேண்டப்படுவது:**

31.12.2001 இல் முடிவுற்ற ஆண்டிற்கான திணைக்கள வியாபாரக் கணக்கினை நிரல் முறையில் தயாரிக்குக.

**10 புள்ளிகள்**

II. குமார், சுரேஷ், ரமேஷ், ஆகியோர் இலாபநட்டங்களை முறையே 5:3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொள்ளும் பங்குடமை ஒன்றின் பங்காளராவர். 30.06.2002 இல் அவர்களது ஐந்தொகை பின்வருமாறு :

| பொறுப்புக்கள் | | ரூபா. | சொத்துக்கள் | ரூபா. |
|---|---|---|---|---|
| மூலதனம்: | குமார் | 250000 | காணி கட்டடம் | 400000 |
| | சுரேஷ் | 150000 | தளபாடம் | 150000 |
| | ரமேஷ் | 100000 | இருப்புக்கள் | 50000 |
| நடைமுறைக்கணக்கு: | குமார் | 25000 | கடன்பட்டோர் | 45000 |
| | சுரேஷ் | 15000 | காசும் வங்கி மீதியும் | 55000 |
| | ரமேஷ் | 10000 | | |
| பொது ஒதுக்கம் | | 50000 | | |
| சீலனிடமிருந்து பெற்ற கடன் | | 50000 | | |
| கடன்கொடுத்தோர் | | 50000 | | |
| | | **700000** | | **700000** |

01.07.2002 இல் இருந்து சீலனை 1/5 இலாபப் பங்குடன் பங்குடமையில் அனுமதிப்பதற்கு பங்காளர்கள் தீர்மானித்தனர். அவரது இலாபப் பங்கானது தொடர்ந்திருக்கும் பங்காளர்களால் அவர்களது இலாபநட்ட விகிதப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேலும் புதிய பங்காளர் ரூபா. 100000 மூலதனத்தை காசாக கொண்டுவந்தார். அதே திகதியில் ரமேஷ் பங்குடமையில் இருந்து விலகத் தீர்மானித்தார். அத்திகதியில் பங்குடமையின் நன்மதிப்பு ரூபா. 60000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டது. நன்மதிப்புக்கு கணக்கு ஏதும் திறவாமல் பங்காளர் மூலதனக் கணக்கின் ஊடாக அதனை செம்மையாக்குவதென தீர்மானிக்கப்பட்டது. மேலும் அத்திகதியில் பின்வரும் சொத்துக்களும் பொறுப்புக்களும் மீள்பெறுமானமிடப்பட்டன.

| | ரூபா. |
|---|---|
| காணி கட்டடம் | 450000 |
| தளபாடம் | 125000 |
| இருப்புக்கள் | 45000 |
| கடன்பட்டோர் | 43000 |
| கடன்கொடுத்தோர் | 48000 |

LIBRARY
04 OCT 2002
Eastern University, Sri Lanka

ரமேஷுக்கு செலுத்த வேண்டிய தொகை 01.07.2002 இல் காசாக செலுத்தப்பட்டது.

வேண்டப்படுவது :

பின்வருவனவற்றைத் தயாரிக்குக.

i. பங்காளர் மூலதனக்கணக்கு
ii. பங்காளர் நடைமுறைக்கணக்கு
iii. காசுக்கணக்கு
iv. சொத்து மீள்மதிப்பீட்டுக்கணக்கு
v. 01.07.2002 இல் உள்ளவாறான ஐந்தொகை

**10** புள்ளிகள்

மொத்தம் **20** புள்ளிகள்